செ.வெ.எண்.204 நாள்.09.05.2017

<u>புத்திரிக்கை செய்தி</u>

இந்திய விமானப்படையில் **Group ‘Y’ (Automobile Technician, Ground Training Instructor and Indian Air Force (Police)Trade)** பணிக்கு **CO, 8 Airmen selection Centre** மூலம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பிரதேசம் சாந்த யூனியன் மாவட்டங்களில் உள்ள திருமணமாகாத ஆண்கள் அண்ணா ஸ்டேடியம், ரேஸ் கோர்ஸ், திருச்சிராப்பள்ளியில் 20.05.2017 முதல் 25.05.2017 வரை நடைபெறும் இராணுவ ஆட்சேர்ப்பு **Rally**-ல் கலந்துகொள்ளலாம். இத்தேர்விற்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் 07.07.1997-க்கு பின்னரும் 20.12.2000-க்கு முன்னரும் பிறந்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் சான்றுகளுடன் கலந்து கொள்ளவேண்டும்.

1. கல்விச்சான்று
2. வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட இருப்பிடசான்று
3. கல்விச்சான்றில் மாவட்டப்பெயர் குறிப்பிடப்படவில்லை எனில், மற்றும் பிறமாநிலங்களில் கல்வி பயின்ற மாணவர்கள் குடியுரிமைசான்று (**Domicile Certificate**) பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
4. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள விமானப்படை மையங்களில் பணிபுரியும் படைவீரர்களின் சிறார்கள் **Son of Air Force Personnel (SOAFP)** சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்
5. மேற்குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் வாழும் முன்னாள் விமானப்படை படைவீரர்களின் சிறார்கள் குறைந்தபட்சம் ஒரு வருடம் இருந்ததற்கான சான்று மற்றும் நகல், **AFRO/DAV**-ஆல் கொடுக்கப்பட்ட முன்னாள் படைவீரர்களின் படைவிலகல் புத்தகம்

மேற்கண்ட ஆவணங்களுடன் ஆட்சேர்ப்பு திரளணியில் கலந்துகொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள அனைத்து முன்னாள் படைவீரர்களின் சார்ந்தோர்கள் கலந்துகொண்டு பயனடைமாறும், மேலும் விவரங்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவிஇயக்குநர் அலுவலகத்தை அணுகிடலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.